**செய்தி வெளியீடு எண்:416** **நாள் : 19.08.2016**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழகம் முழுவதும் 486 அரசு இ–சேவை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடம், அனைத்து மண்டல, பகுதி மற்றும் கோட்ட அலுவலகங்கள் ஆகிய இடங்களில் இச்சேவை மையங்கள் தற்போது சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. இந்த அரசு இ–சேவை மையங்களின் மூலம் பொதுமக்கள் வருவாய்த் துறை, சமூக நலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் வழங்கப்படும் பல்வேறு சேவைகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சொத்து வரி, தொழில் வரி மற்றும் நிறுவன வரி செலுத்துதல் ஆகிய சேவைகளும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், இம்மையங்களில் பொதுமக்கள் தமிழ்நாடு அரசின் மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின்கட்டணம் மற்றும் குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் வரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை செலுத்தும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 208 அரசு இ–சேவை மையங்கள் வாயிலாக இதுவரை 2,45,726 பரிவர்த்தனைகள் நடத்தப்பட்டு 102 கோடியே 11 லட்சம் ரூபாய் வரி வசூல் செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் தங்கள் இல்லங்களுக்கு அருகில் உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் இ–சேவை மையங்களை அணுகிப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**